**பியகம பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பியகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பியகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.6 | நடப்பாண்டிற்கான நிதிக்கூற்றுக்குரிய காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய சமமானான காலப்பகுதி தொடர்பாக இணக்கம் செய்யக்கூடிய ஒப்பீட்டுரீதியான தகவல்கள் காண்பிக்கப்படாமை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் பெறுமதிகளை உள்ளடக்கி கணக்குகள் தயாரிக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 110,373,331 தொகையான மூலதன மானியங்களின் ஆண்டிற்குரிய பெறுமதியான ரூபா 11,037,333 நடைமுறையல்லா செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்தான கையளித்தல் கணக்கில் மாற்றப்படாமையின் காரணமாக விரிவான வருமானக் கூற்றில் மிகை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டு முதல் நடைமுறையல்லா செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்து பெறுகின்ற கையளித்தல்கள், ஆண்டிற்குரிய பகுதி இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும். | ஆண்டிற்குரிய பகுதியை இனங்கண்டு கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாக்கொல பல்நோக்கு கட்டிடத்தில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், அதற்காக செய்யப்பட்டுள்ள செலவினம் ரூபா 407,730,682 நடைமுறை வேலைக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாத சொத்துக்கள் மூலதனமாக்க முடியாது. |
| (இ) | பெறவேண்டிய கடை வாடகை, பெறவேண்டிய பிணை முறி வாடகை, நிலுவை வீட்டு வாடகை என்ற கணக்குகளின் மீதிகளுக்கும், பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 2,407,856 தொகையான வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு பதிலாக இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் உரிய கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகளின் மூலம் இருப்பு மற்றும் ஒதுக்கீட்டு கணக்குகள் அகற்றப்பட்டு உரிய கணக்குகளில் பதியப்பட்டு சரிசெய்யப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஆயுர்வேத இருப்பு பெறுமதிக்கும், பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 665,792 | 2021 இன் இறுதிக் கணக்குகளின் மூலம் இருப்பு மற்றும் ஒதுக்கீட்டு கணக்குகள் அகற்றப்பட்டு | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து கணக்குகளை |

| | | |
|---|---|---|
| தொகையான வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு பதிலாக அந்த வேறுபாடுகள் ஆயுர்வேத இருப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | உரிய கணக்குகளில் பதியப்பட்டு சரிசெய்யப்படும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) குளிக்கும் கிணறு மற்றும் மயான நிலங்கள் தவிர்ந்த காணிகள் தொடர்பாக மாத்திரம் 2021 மே 07 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலையின் பிரகாரம் காணிகளின் பெறுமதி ரூபா 459,695,682 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணிகளின் பெறுமதி ரூபா 172,620,000 ஆனமையால் காணிகளின் பெறுமதி ரூபா 287,075,682 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக மேலும் பரீட்சித்து 2021 இன் இறுதிக் கணக்குகளின் மூலம் சரிசெய்யப்படும். | வேறுபாடு களுக்கான காரணங்களை கண்டறிந்து சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விட விஞ்சிய வருமானம் ரூபா 130,566,894 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 47,531,362 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 56,558,110 தொகையை நிலுவை அலகுகளாக இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடம் முழுவதும் காணப்பட்ட Covid 19 தொற்றுநோய் பரவல் நிலைமையின் அடிப்படையில் நடமாடும் எல்லை வரையறை விதித்தல் மற்றும் சில கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தல் மேற்கொண்டமையின் | நிலுவை வருமானத்தை அலகுகளாக இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் நிலுவையை அறவிடும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த அறவிடலின் செயல்முன்னேற்றம் 63 சதவீதம் ஆகும். எதிர்காலத்தில் நிலுவை அலகுகளை இனங்கண்டு மிகுதி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**2.2.2 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 3,290,100 ஆன 86 கடைகள் உடன்படிக்கையின்றி 01 வருடம் முதல் 28 வருடங்கள் வரையான காலப்பகுதிக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் கடவத்த உப அலுவலகத்தில் சேகரிக்கப்பட வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 8,438,257 இல் சேகரிக்கப்படாதிருந்த கடை வாடகை வருமானம் ரூபா 7,388,652 ஆகும். அதில் 06 கடைகளின் கடை வாடகை வருமானம் ரூபா 6,959,107 இற்கு வழக்கு நடவடிக்கைகள் காணப்படுகின்றமையால் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கடைகளுக்கு உடன்படிக்கைகள் தயாரிக்கப்படுவதுடன் தற்போது வரையில் கடை உரிமையாளர்களினால் பிணைப்பணம் உரிய உப அலுவலகங்களுக்கு வருகை தந்து செலுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் சகல கடைகளுக்கும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>2020 ஆம் ஆண்டில் கடவத்த உப அலுவலகத்தில் சேகரிக்கப்பட வேண்டிய கடை வாடகை பணமான ரூபா 8,438,257 தொகையில் கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு சேகரிக்கப்பட்ட ரூபா 878,115 தொகைக்கு மேலதிகமாக தற்போது வரையில் ரூபா 171,490 தொகை அறவிடப்பட்டுள்ளது. கடவத்த உப அலுவலகத்திற்குரிய சீ 1 முதல் சீ 6 வரையான | சகல கடைகளுக்கும் உடன்படிக்கை செய்து குறித்துரைத்த பிரகாரம் வாடகையை அறவிடுவதற்கும், நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கடைகளுக்கு உரியதாக வழக்கு காணப்படுகின்றமையால் அந்த 06 கடைகளின் நிலுவைப் பணத்தை அறவிடமுடியாமல் சிட்டையிடப்பட்டிருந்தது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் கெரவலப்பிட்டி கழிவுப்பொருள் தளத்திற்கு கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக சபையின் 11 வாகனங்கள் மற்றும் 53 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டில் ரூபா 21,375,950 செலவிடப்பட்டிருந்தது. அதன் போது உக்கும் கழிவுப்பொருட்கள் 4637 மெற்றிக் தொன் மற்றும் உக்காத கழிவுப்பொருட்கள் 1465 மெற்றிக்தொன் அகற்றப்பட்டிருந்த போதும், கழிவுகளை மீள்சுழற்சி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுப்பசளைத் தளமொன்றை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான மற்றும் போதியளவான காணியொன்று சபைக்கு சொந்தமாக இல்லாமையால் கூட்டுப்பசளை உற்பத்தியில் கவனம் செலுத்துவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். | பொருத்தமான காணியொன்றை பெற்று கூட்டுப் பசளைத் தளமொன்றை நிர்மாணித்து கழிவுகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காணி அளவு 01 றூட் 14.40 பேர்ச் அளவான தெற்கு மாகொல ஹெதவத்த கஹவத்த பொது வசதிகள் காணியில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா கைவிடப்பட்டிருந்தமை மற்றும் அதில் அனுமதியற்ற நிர்மாணமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை, | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கும் 05 குடும்பங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு அவதானிப்பு, ஒழுங்குபடுத்துதல் மற்றும் | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அனுமதியற்ற குடியிருப்பாளர் களை அகற்றுவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | தெல்கொட கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள 01 றூட் 33.5 பேர்ச் அளவான மில்லகஹலந்த காணி கூறுகளில் 05 குடும்பங்கள் அனுமதியற்ற வகையில் குடியிருந்து வருகின்றமையும், சபை அது தொடர்பாக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நில அளவு 03 றூட் 2.41 பேர்ச் அளவான தெல்கொட வலச்வத்த காணியில் கூறு இலக்கம் 05 பொது வசதிகளுக்கான காணியில் (லொட் இலக்கம் 26-30 வரை) சனசமூக மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தூண்கள் மாத்திரம் அமைக்கப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மாவரமண்டிய கிராம சேவகர் பிரிவிற்குரிய ”‘ஒரேன்ஞ்பில்வத்த’’ விளையாட்டரங்கில் சிறுவர் பூங்காவொன்று காணப்பட்ட போதிலும் அதில் ஸ்தாபிக்கப்பட்ட சீசோ, வழுக்கும் படகு மற்றும் ஊஞ்சல் என்பன பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | தெல்கொட வலச்வத்த காணி பிரதேச சபைக்கு பொது வசதிகள் நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது ரன்விமன மித்துறு ஹவுல விளையாட்டு நலன்புரிச் சங்கத்தினால் சனசமூக மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச சபையினால் நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொது வசதிகளுக்கான காணி சபைக்கு சொந்தமான ஆதனமாக இருந்தமையால் அதனை சரியாக முகாமைத்துவம் செய்ய வேண்டியிருந்த துடன் விளையாட்டரங்கில் தாபிக்கப்பட்டுள்ள உபகரணங்களை பயன்படுத்து வதற்காக மக்களுக்கு தெரியப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |